

# இஸ்லாம் மித்திரன்.

# Islam Mittiran.

"லா இலாஹ இல்லல்லாஃ
முஹம்மதுறஸுூலுல்லாஃ"

புத்தகம்-1 { அறபி ஹிஜ்ரி 1311 துல்கஃதா மீ 1உ ஞா. வ. / இங்கிலிஷ் ஹு 1894 மேய் மீ 6உ ஞா. வ. } இலக்கம்-6.

## இமாம் அபுல்ஹஸன் சாதுலி றஹ்மதுல்லாஃ அவர்கள் சரித்திரம்.

[சென்ற 5 மிலக்கப் பத்திரிகைத் தொடர்ச்சி.]

எங்கள் நாயகம் அபுல் ஹஸன் றஹ்மதுல்லாஃ அவர்களின் லட்சணம், குணங் குறிப்பு முதலிய வற்றையும், அவர்கள் தேசாந்திரியாய்ப் பிரயாணஞ்செய்யத் தலைப்பட்டவை முதலிய வற்றையும் மூன்றாவதாய்க் கூறுவோம்.

இமாம் சாதுலி நாயகம் அவர்கள் செவ்வெண்மை நிறமுடையவர்கள்; சரீரம் மெலிவுடைத்தவர்கள்; நெட்டையானவர்கள்; இருதாடைகளும் (அதிகச் சதையில்லாது) ஒடுங்கினவர்கள்; கைவிரல்கள் நீண்டிருக்கும்; இவர்களின் சரீர லட்சணத்தால் ஹிஜாஸ் என்னும் மக்காபட்டணத்தைச் சேர்ந்தவர்களைப் போன்றிருப்பார்கள். அவர்களின் வார்த்தையின் வாக்கியத்தையும் உச்சரிப்பின் இனிமையையும் வர்ணிக்கக் கூடாது. அவர்களின் கூட்டத்தவர்களாகிய சூபியாக்கள் என்னும் மெய்ஞ்ஞானிகளின் விசனங்களிற் பேசத் தொடங்கினுலோ அதிலே பிரவேசித்து ஞானியர்

தங்களை வெளிப்படுத்துவார்கள். மெய்ஞ்ஞான மயமாயிருக்கும்போது நானாகிறவன் என்னுடைய கல்வி அறிவையும், என்னுடையபதவி, அதிகாரங்கள் முதலிய யாவற்றையும் நபிகள் நாயகம் அவர்களிடமிருந் தெடுத்தேன், சகலமெய்ஞ்ஞான அந்தரங்க அறிவுகளையும் அவைக்குரிய இரகசிய நாம கரண பொக்கிஷங்களின் திறவுகோலையும் எனக்குக் கொடுக்கப்பட்டிருக்கின்றது, ஆகவே, இவ்வுலகின் கண்ணுள்ள மானுஷிக கூட்டங்களும் ஜின் கூட்டங்களும் உலகமுடிவு பரியந்தம் எனது அறிவினது இரகசியங்களை அவர்கள் எழுதினபோதிலும் கொஞ்சமேனும் எழுதிக்கொள்ள மாட்டார்கள், அன்றியும் அதிற் பிரவேசித்து சடைந்து விடுவார்கள் என்றுங் கூறுவார்களென்று மெய்ஞ்ஞான சுரூபியாகிய இமாம் ஷையாது றலியல்லாஹு அன்ஹு என்பவர்கள் "மபாகிர்" என்னுங் கிதாபிலும், மகா கலை வல்லோராகிய இப்னு ஸபாகி றலியல்லாஹு அன்ஹு அவர்கள் "துர்ரத்துல் அஸ்றூர்" என்னுங் கிதாபிலுங் கூறுகின்றார்கள்.

இந்த, குத்புநாயகம் அவர்கள் சிறுபராயத்திலே தங்களது சுதேசத்தை விட்டு நீங்கி தூனிஸ் என்னும் பட்டணத்துக்கெழுந்தருளியானார்கள். தூனிஸிற் சில நாட்களிருந்து அவ்விடத்தால் கிழக்குப் பகுதியைச் சார்ந்த தேசங்களுக்குச் சென்று, அப்பால் பரிசுத்த ஸ்தலமாகிய மக்கா பட்டணம் மதீனா நகரம் ஆகிய இவ்விரு வேத புரம் விஜய புரங்களிற்சென்று அனேக ஹஜ்ஜுகளும் ஸ்தலதரிசனங்களுஞ் செய்திருக்கின்றார்கள்.

இந்நாயகம் சரியை கிரியை யோகத்திற்குரிய ஞானங்களைச் சிறிய வயதிலே பெற்றுக்கொண்டவர்கள். அகம் புறம் இரண்டுக்குமுரிய கலை ஞானங்களை பூரணமாய் ஒரேபடி யுணர்ந்தவர்கள். இவர்கள் கற்றறிந்த அநேகக்கல்விகளிற் சிலதாவது:— வேத சாஸ்திரம்-வேதாகம வியாக்கியான சாஸ்திரம்-நீதி சாஸ்திரம்-யோக சாஸ்திரம்-வியாகரணம்-தரும சாஸ்திரம் - காவிய சாஸ்திரம் - இதிகாசம் - வசீகரணம் - ஜன்மீகம் - பிராணி தர்ம குண வித்தை முதலியவைகளே. இக்கல்விகளிலெல்லாம் வழிகாட்டியாயிருந்தார்கள். ஞான அகிய தானியங்களுக்கு அவர்களே குத்பு என்னும் மழைபாகவும், அவை வளர்ந்தோங்கி வெளிப்பதற்கு அவர்களே ஞானோதய பானுவாகவுமிருந்தார்கள்.

குத்பு நாயகம் அவர்களுக்குச் சிறுவயதிலே அநேக அற்புதாச்சரியங்கள் அல்லாஹுத் தஆலாவாற் கிடைக்கப்பெற்றிருந்தன. மெய்ஞ்ஞானிகளாகிய செய்குமார்கள், அவுலியாக்கள், முதலிய நாதாக்கள் எப்பகுதிகளி லிருந்தார்களோ அப்பகுதிகளுக்கெல்லாம் அந்நாயகர்களைக் கண்டு தரிசனை புரியுமாறு செல்வதுவே அக்காலத்தில் அவர்களுக்குப் பிரதான வழக்கமாயிருந்தது

பரிசுத்த பட்டண ஸ்தலங்களுக்கு வந்தண தெரிசனங்களுக்கு பல தடவைகளிலுஞ்சென்ற சங்கதியை மேலே கூறியிருக்கின்றோம். அப்படிச் சென்றதற்குப் பின்னர் இறாக்கு தேசத்திற்குப் பிரயாணப்பட்ட சங்கதியைக் குறித்து குத்பு நாயகம் அவர்களே தங்கள் திருவாக்கினாலே கூறியிருக்கின்றார்கள். அதைக்கூறுவோம்.

நான் இருக்கு தேசத்திற்குப் போயிருந்தேன். அப்போழ்தில் அங்கே அனேக செய்குமார்க ளிருந்தார்கள். ஆனால் அபுல் பத்ஹில் வாஸித் தீ றஹ்மதுல்லாஹ் அவர்களே யாவரினும் மீசுரப்பட்டவர்களா யிருந்தார்கள். நான் (தரீக்) இட்சை பெற வேண்டுமென்கிற அபிப்பிராயத்தோடு தர்க்காலத்திற்கு குத்பு என்னும் மஹாத்துவ பட்டம்பெற்ற பரமானுக்கிரஹ மெய்ஞ்ஞானி எங்கேயிருக்கின்றார்களென அவர்களிடம் வினவியதற்கு, நீர் இருக்கு நாட்டிலா குத்புபட்ட முடையவர்களைத் தேடுகிறீர்? தர்க் காலத்திற்கு குத்பாக இருக்கிறவர்கள் உம்முடைய மருஜிபு தேசத்திற்தா னிருக்கின்றார்கள். ஆகையால் நீர் உம்முடைய பட்டணத்திற்குப்போய் அந்த குத்பு அவர்களைக் கண்டுக் கொள்வீர் என்று பிரத்தியுத்தரங் கூறினார்கள். உடனே நான் அவர்க ளிடத்தால் விடைபெற்றுக் கொண்டு மருஜிபு தேசத்திற்குப் பிரயாணமாய் வந்து சேர்ந்தேன்.

இன்னும் வரும்.

## நல்லுபதேசம்.

எங்கள் இரட்சக நாயகர் நபிகள் பெருமானார் அவர்கள் திருவாய் மலர்ந்து, எனது மார்க்க அனுசாரிகளே! நான் ஐந்து விஷயங்களைப்பற்றி உங்களுக்கு உபதேசிக்கின்றேன் அவைகளை நீங்கள் பேணி நடந்து கொள்ளுங்கள். அவைகளில் முதலாவது நீங்கள் மனிதர்களை ஞாபகப்படுத்துவதைப் பார்க்கிலும் அல்லாஹுத்த ஆலாவை ஞாபகப்படுத்துவதை மிகுதப்படுத்துங்கள். இரண்டாவது, இம்மையைப் பார்க்கிலும் மறுமை ஞாபகத்தை அதிகப் படுத்துங்கள். மூன்றாவது, உங்களுடைய நன்மைகளை நினைப்பதைப் பார்க்கிலும் உங்கள் தீமைகளையே அதிகமாக நினையுங்கள். நான்காவது, உங்கள் வாழ்வை நினைப்பதைப்பார்க்கிலும் உங்கள் மரணத்தை அதிகமாய் நினையுங்கள். ஐந்தாவது, பிறருடைய பழிப்புகளை நினைப்பதைப் பார்க்கிலும் தன்னுடைய பழிப்புகளையே அதிகமாய் நினைத்துப் பாருங்கள் என்று அருளியிருக்கின்றார்கள்.

இதோ மேலே கூறப்பட்ட ஐந்து விஷயங்களாகிறது விலைமதிக்கப் பெறாத பஞ்ச ரத்தினம் பொதிந்த ஆபரணத்துக் கொப்பா யிருக்கின்றது. இதை எவனொருவன் தனது நித்திய கழுத்தணியாய்க் கொண்டானோ அவன் ஜெயமடைவான்.

## இலங்கை வைபவம்.

நாம் வாசம் செய்யும் இத்தீவை இலங்கையென் றழைக்கப் படுகிறது. இஃதன்றி, ஈழம், இலங்கா, தாமிரவருணி, சிங்களத்துவீபம், சரண்தீப், சைலான், சேத்து, தாபிரபனி, இராவணதீவு, தம்பப்பாணி, முதலிய பற்பல சாதியாராலுங் கூறப்பட்ட பரியாய நாமங்களுமுண்டு. இது இந்தியாவின் தென் கிழக்கே இந்து சமுத்திரத்திலிருக்கிற ஓர் தீவு. இது இந்தியாவிலிருந்து மன்னார்க் குடாக் கடலினாலும், பாக்குத் தொடுவாக் கடலி

றும் பிரிக்கப்படுகிறது. இதன் வடிவம் ஏறக்குறைய மாங்கனிக்கொப்பாயிருக்கிறது. இதன்நீளம் 271¼ மைல்; அகலம் 137½ மைல்; சுற்றளவு 760 மைல்; இதன் முழு விஸ்தாரம் சிறு தீவுகளையுஞ் சேர்த்து 25,363 சதுர மையில்; குடி சனம் ஏறக்குறைய 30,00,000 லட்சம், இதில் முஸ்லிம்கள் 220,000 லட்சம். இத்தீவைக் குறித்து பற்பல சாஸ்திர பண்டிதர்களும் மிகப்புகழ்ந்து வர்ணித்திருக்கிறார்கள். இராஜ நாயகம் சுலைமானபி அவர்கள் இலங்காபுரிக்கு, தங்கள் சேவகர்களைக் கப்பல் மார்க்கமாக அனுப்பி, இரத்தினம், யானைத் தந்தம், குரங்கு, மயில் முதலியவைகளை வரவழைப்பித்தாரென்று ஐரோப்பிய சரித்திராசிரியர்கள் கூறுகின்றார்கள்.

கல்த்தான் இஸ்கந்தர் பூலோகத்தில் கிழக்குமுதல் மேற்குவரையிலும் உள்ள சகல தேசங்களையும் ஏக சக்கிறவர்த்தியாயிருந்து அரசாண்ட அக்காலத்தில் இஸ்கந்தர் கல்த்தான் இலங்கைக்கு பாவா ஆதமலைத் தரிசனத்துக்காக வந்தபோது, அதற்கேறுதற்கு படிகளில்லா திருந்தமையால், படிகளியற்றிச் சங்கிலிகள் பூட்டினார்கள். தர்க்காலத்தில் போடப்பட்டிருக்கின்ற சங்கிலியும் வெட்டப்பட்ட படிகளும் அவர்களாலே செய்யப் பட்டவையென்று அறபுக்கித்தாபுகளிற் கூறப்படுகிறதாய்ச் சில இங்கிலீசுச் சரித்திர நூலாசிரியர்கள் கூறி யிருக்கின்றார்கள். கல்த்தான் இஸ்கந்தர் இலங்கைக்கு ஆதமலை தெரிசனைக்காக வந்ததைக்குறித்து, இற்றைக்கு காநூற்றுச் சில்வானம் வருஷங்களுக்கு முன்னிருந்த கீர்த்திபெற்ற "அஸ்றப்" என்னும் பாரீஸ் புலவரும் அந்தச் சங்கிலிகளும் படிக்கட்டும் அவர்களாலே செய்யப்பட்டதாக துதித்துப் பாடியிருக்கின்றார்.

இற்றைக்கு ஏறக்குறைய 2400 வருஷங்களுக்கு முன்னர், இவ்விலங்கை தீவு, யானை, கரடி, புலி முதலிய விலங்கு சாதிகள் சஞ்சரிக்கும் வனாந்தரமாயிருந்தது. அவ்வனாந்தர மத்தியில் சில வேடரே யன்றி வேறொரு மானிட சீவனுமிருந்ததில்லை. அக்காலத்தில், (இந்தியாவில்) வங்கதேசத்திலே இராசனாயிருந்த சிங்கபாகுவின் மூத்த குமாரன் விஜய சிங்கன் என்பவன் மகா துட்டனாயிருந்தமையால், தன்னூட்டினின்று பிதாவால் துரத்தப்பட்டுக் கப்பலேறி, இப்பொழுது புத்தளமென் றழைக்கப்படுமிடத்துக்குச் சமீபமாய் இலங்கைக் கரையில் வந்து சேர்ந்தான்.

## துஃபத்துல்கிராம்.

[சென்ற 5 மிலக்கப் பத்திரிகைத் தொடர்ச்சி.]

எல்லா அறிவுகட்கும் இறவுகோலாயிருக்கிற அறிவு தன்னுடைய விவேகத்தின் தன்மையையும், விவேகத்தால் அறியக்கூடிய இந்தமட்டென்பதையும் அதற்கதிகமாக விவேகஞ் செல்லாதென்பதையும் நன்றாயறிந்து திட்டப்படுத்திக் கொள்வதாம். அப்படி அறிந்தால் எந்தச் சாத்திரங்களைப் படித்தாராய்வதிலும் ஞான விஷயங்களைக் குறித்து விளங்கிக் கொள்வதிலும், மோசம் போக மாட்டார்கள். ஒருவன் சாஸ்திரங்களை ஆராய்வதற்கு முன்னர், தன்னுடைய புத்தி இந்த மட்டுக்குச்

செல்லுமென்பதை பிரமாணப்படுத்திக்கொள்ள வேண்டும். அதற்கோர் உதாரணஞ் சொல்லுவோம். சமுத்திரத்தின் ஆழத்தை அளக்கப்போகிறவன் தன் அளவுக்கரிவியாகிய கயற்றின் நீளம் இவ்வளவு என்று அறிதல் வேண்டும். அப்படி அறியாமல் நாலுமுழக் கயற்றைக்கொண்டு எட்டுமுழ ஆழத்தை அறியப் போகுமா? இங்ஙனமே மனிதர்களின் புத்தி செல்லுமட்டிவ்வளவென்றறியாமல் ஆழமான புதை பொருளுடைய வாக்கியங்களை அறிய வேண்டுமென்று பிரயாசமெடுப்பது தன்னுடைய காலத்தை வீணிற்கழிப்பதன்றி வேறில்லை. ஆனால் தத்துவ சாஸ்திரத்தைப்படித்தறியாதவர்கள் இவைகளை யிலகுவாய் விளங்கிக் கொள்ள மாட்டார்கள்.

“ துஹ்பத்துல்முஹ்ம் ” என்னுங் கித்தாபில் நபிகள் நாயகந் திருவாய் மலர்ந்தருளிய வோர் ஹதீதை அந்த கித்தாபின் ஆசிரியரவர்களால் தமிழால் மொழிபெயர்த் தெழுதப்பட்டதற்கு (சிர்று) இரகசியத்தை வெளிப்படுத்திவிட்டார்களென்று அந்த ஆலிம் சாஹிபு அவர்கள்மீது குற்றஞ் சாட்டிப்பேசுகிறவர்களுக்கு நாம்சொல்லுகிறதாவது, அவர்களால் வெளியாக்கப்பட்ட இந்த ஹதீது அறபிய்யத்தானபாஷையில் முற்காலந்தொடுத்து வழங்கிவரப் படுகிறதன்றி நூதனமாயுள்ளதல்ல. இதை எத்தனையோ இமாம்கள் உலமாக்கள் கண்டும் வாசித்துமிருக்கின்றார்கள். இதைக் கேளாதவர்களுக்கும் அறியாதவர்களுக்கும் இது இரகசியமே யல்லாமல் மற்றவர்களுக்கு இது இரகசியமல்ல. இந்த சங்கதியை அறியாமலே அந்த ஆலிம் சாஹிபவர்களைக் குறையாய்ப் பேசுகிறார்கள். அப்படித் திட்டுகிறவர்கள் இதை யறிந்திருந்தால் தங்கள் மனந்தெளிவாகி அந்த தப்பான எண்ணங்களை விட்டு நீங்கிக்கொள்ளுவார்கள்.

இன்னும், இதைப்பற்றிச்சில பின்னும் பேசுவோம்.

## அறிவு வணக்கத்திற்கு முக்கிய துணைக் கருவி.

“ நீங்கள் அறியாதவர்களாயிருந்தால் அறிவுடையவர்களிடத்திற் கேளுங்கள் ” என்பது நாயனின் திருவாக்கு. அறிவில்லாமற் செய்கிற மிகுந்த வணக்கத்தைப்பார்க்கிலும் கற்றறிந்து செய்கிற கொஞ்ச வணக்கம் நலம் என்பது நபிகள் நாயகத்தின் திருமொழி. இதைப்பற்றி ஒரு பெரியோர்களாற்சொல்லப்பட்ட சிறிய சரித்திரத்தை உதாரணமாயெழுதுவோம்:— ஒரு தேசத்தில் இரண்டு சகோதரர்களிருந்தார்கள், அவ்விருவரிலொருவர் (இபாதத்து) தவஞ் செய்வதற்காக ஒரு மலையடிவாரத்திற்சென்று இரவு பகல் முழுவதிலும் வணங்கத்தொடுத்தார். மற்றவர் அறிவுபடிப்பதற்காகப் பட்டணத்திற்சென்று கல்வியின்பே

ரில் முயற்சிசெய்தார். இவ்வாறு அவ்விருவரும் நடந்து வருங்காலத்தில், அந்த மலைச்சாரலில் வணங்கின வணக்கவாளியிடத்தில் ஒரு எலி போக்குவரவு செய்து கொண்டிருந்தது. இந்த எலியால் வணக்கத்துக்கு கலைவுண்டாகிறதினால், அவர் அதை அடித்துக் கொன்றுபோட்டார். அப்போது இபுலீசு ஒரு நெறியான் முதியசெய்குடையகோலத்தில் அவரிடத்துக்கு வந்து அவரைச் சந்திக்க வந்தவரைப் போலநடித்து இந்த செத்த எலி அவடத்திலிருப்பதைக்கண்டு, இது எப்படிச் செத்ததென்று வணக்க வாளியைக்கேட்க, இவ்வெலி என் வணக்கத்தைப் பராக்காக்கிக் கெடுத்துக் கொண்டிருந்தமையால் நான் கொன்றேனென்றார். அப்போது அந்த செய்கு, ஆ! இப்படியும் செய்வார்களா? ஆ! மோசம் போனீரே என்று கைசேதப்பட்டு ஒரு வேதவாக்கியத்தை ஓதிக் காட்டினார், அதன் பொருளாவது; யாராகினு மொருவன் ஒரு உயிரைக்கொன்றானேயானால் அவன் மனிதர் அடங்கலையுங்கொன்றவனைப் போல இருப்பானென்றான், அதைக் கேட்ட வணக்கவாளி, திடுக்கிட்டு மனந்தடுமாறி, ஐயோ! நான் அல்லாவின் பாதையில் தவஞ் செய்ய வந்து இவ்விதமான பாவத்தைச் செய்து மோசம் போனேனே! நான் இதற்கென்ன செய்தால் என் பாவம் நீங்குமென்றுகேட்டார். அப்போது இபுலீசான செய்கு, இப்பாவம் பொறுக்கப்படவேண்டுமானால் இந்த எலிச்சவத்தைத் துண்டு துண்டாய் நறுக்கிக் கழுத்திற் கோர்த்துப் போட்டுக்கொள்ள வேண்டுமென்றுசொன்னார். அதற்கு அவர் உடன்பட்டு அப்படியே எலிச்சவத்தை கழுத்திலிட்டுக்கொண்டார். இனி இவ்வாறு வணங்கிக் கொண்டிருக்கையில், அறிவு படிப்பதற்காகப் போன இவருடைய சகோதரன் மார்க்க அறிவு நடவடிக்கை முதலியவைகளைப்பூரணமாகக்கற்றுத் தேர்ந்தபின்னர் வணக்கஞ்செய்யும் தன்னுடைய சகோதரனைப்பார்ப்பதற்காகத் தேடி வந்தார். அப்பொழுது அவர் தொழுகையிலிருக்கிறார். தொழுகையிலிருப்பவரைப் பார்த்துக் கொண்டிருக்கையில் அவருடைய கழுத்திலொரு கொடிபோன்ற திருப்பதைக் கண்டு ஆலோசித்தவராக நின்றார். இனி இவர் தொழுது முடிந்த பிறகு ஒருவருக்கொருவர் தழுவி வினவிக்கொண்டு, அறிவு படித்துவந்த சகோதரர், வணக்கவாளியைநோக்கி தங்கள் கழுத்திலிருப்ப தென்னவென்று கேட்க, அப்போதவர் சகோதரனைப் பார்த்து என் அருமைச் சகோதரா? கேளுமென்று தனக்கு நடந்தவற்றை ஆதியோடந்தமாய் சொன்னார். ஆ? இதென்ன காரியஞ் செய்துகொண்டீர். தொழுகை நிறைவேறுகிறதற்கு உடலும் உடுமானமும் இடமும் அசுத்தமின்றி துப்பரவாயிருக்கவேண்டியதே. மனிதனும், வெட்டுக்கிளியும், மீனும்தவிர மற்றுஞ்செத்தவையாவும் தீட்டாகவிருக்கிறதே, நீர் மார்க்க அறிவுகளைப்படிக்க ஆரம்பிக்காமல் வணக்கத்தைமாத்திரஞ் செய்துவந்ததால் உம்முடைய வணக்கமெல்லாங் கூடாமலாயிற்று

இந்த செத்த எலியைக்கழுத்திற்றூக்கியவன் அறிவில்லாதவர்களை மோசம் பண்ணும் இபுலீசுயென்றுசொல்லவே இதைக்கேட்டசகோதரர் உணர்ச்சை பெற்றார். ஆதலால் வணக்கஞ்செய்வதற்கு அறிவு முக்கியமாய் வேண்டியதென்பது இதனால் பகல் வெளிச்சம் போல விளங்குகிறது.

## மரணத்தறுவாயில் பசாசின் கலைவு.

இவ்வுலக வாழ்வைவெறுத்து பரலோக நற்பைவிரும்பி, வணக்கஞ்செய்துவந்த "அபாஸக்கரியா" என்னும் பெரியவர்களுக்கு மரணமுடிகி பிராண அவஸ்தையி லிருக்கையில் அவர்களை நோக்கி "லாஇலாஹ இல்லல்லாஹு முஹம்மதுர்ரஸூலுல்லாஹி" (அல்லாஹுத்தஆலாவைத்தவிர வணக்கத்துக்குரிய நாயன் யாருமில்லை முஹம்மதுநபிஅல்லாவுடைய திருத்தூதர்) என்று சொல்லும்படி, படித்துக்கொடுக்கப்படவே, அதற்கு அத்திருவாக்கியத்தைச்சொல்லாமல் முகத்தைத் திருப்பிக்கொண்டார்கள். மறுபடி இரண்டா முறைசொல்லிக்கொடுத்ததற்கு முன்போலவே முகத்தைத்திருப்பிக்கொண்டார்கள் மூன்றாந்தடவை சொல்லிக்கொடுத்ததற்கு நான்சொல்லமாட்டேனென்று சொன்னார்கள். அதைக்கேட்டசிநேகிதர்அபாசக்காரிய்யாபேரில்மனத்துயரமாகி வியசனப்பட்டார்கள். அப்போது, ஒருமணி நேரத்திற்கு பிறகு, அபாசக்காரிய்யா அவர்கள் கண்ணை விழித்து அங்கிருப்பவர்களை நோக்கி "நீங்கள் எனக்கேதாவது சொல்லிக்கொடுத்தீர்களா? வென்று கேட்டார்கள். அதற்கவர்கள்உங்களுக்கு மூன்றுதடவை விசுவாச சாட்சி மந்திரத்தை படிப்பிததோம், அதற்கு நீங்களிரண்டு தடவை முகத்தைத்திருப்பிக்கொண்டீர்கள், மூன்றாந் தடவை நான் சொல்லமாட்டேனென்று சொன்னீர்களென்று சொன்னார்கள். அதுகேட்டு, அபாசக்கரிய்யா அவர்கள், தங்களைசூழ்ந்திருப்போர்களைப்பார்த்து, இபுலீசு தண்ணீர்க் கலையமொன்றைக் கொணர்ந்து அக்கலையத்தை யசைத்து உமக்கு தண்ணீர் வேண்டுமாவென்று கேட்டான் நான் வேண்டாமென்றேன். அதற்கவன் மறுபடியும் உமக்கு தண்ணீர் விருப்பமில்லாதிருப்பினும், நீர், ஈஸா அல்லாவின் மகனென்று சொல்லுமென்றான். அதனை நான் ஒப்புக்கொள்ளமாட்டேன் என்றேன். அப்போது அவன் என் கால் மாட்டுப்பிறத்தில் வந்து நின்று முன்போலச்சொல்ல சொன்னான் அதற்கும்நான் கூடாதென்று மறுத்து நின்றேன். மூன்றாந்தடவை நாயன் இல்லையென்று சொல்லுமென்றான். நான் அப்படிச்சொல்லமாட்டேனென்றேன். அத்தோடு அவன் கையில் வைத்திருந்த தண்ணீர் கலையத்தை யெறிந்துவிட்டு பின்வாங்கி வெருண்டோடினான். ஆனால் நேசர்களே நான் இவ்விதம் இபுலீசின் சொல்லைத்தட்டினேனே தவிர உங்க

ன் சொல்லைத் தட்டவில்லையென்று சொல்லியுடனே "அஷ்ஹது அல்லாயிலாஹ இல்லல்லாஹு வஅஷ்ஹது அன்ன முஹம்மதன் அப்துஹூ வறஸூலுஹூ" (இதன் பொருள் அல்லாவைத் தவிர நாயனில்லையென்று நான் விண்ணப்பஞ்செய்கிறேனென்றும் முஹம்மது நபி அவனுடைய திருத்தூதரும் அடியாருமென்றும், விண்ணப்பஞ் செய்கிறேன்,) என்னும் கலிமாவையோதி மவுத்தாகிப் போனார்கள். [இச்சங்கதி துர்ரத்துன் நாஸிஹின் என்னுங் கிதாபில் 1978 வது பக்கத்தில் வருகிறது.]

ஆதலால் ஸமுதாயநேசர்களான இஸ்லாம் மித்திரர்களே! சன்மார்க்கரான பெரியோர்களாகிய அபூபக்கரிய்யா அவர்களின் மரணத்தறுவாயில் இபுலீசு கலைத்து ஓட்டிப் வந்திருந்தால், பாவத்தையே ஒரு உடையாயுடுத்தி அநித்திய முயற்சியால் ஜென்மத்தரித்திரத்திலே சிக்கி நிற்கின்ற பாவிகளாகிய உங்கள் மரணத்தறுவாயில் எங்கள் நிலைமை எப்படியாமோ! இபுலீசு உங்களைக் கலையாது விட்டுவிடுவானோ! ஆதலால், அல்லாவின் ஏவலையெடுத்து விலக்கலை வெறுத்து தொழுகை முதலிய வணக்கங்களைப் பிந்த வைக்காது நேரத்தவறாது யெடுத்து நடப்போமானால் இவ்வுலகத்தின் இடுக்கங்களையும் ஸகறாத்தில் இபுலீசின் மறுட்டுதல்களையும் விட்டு நீங்கி கலிமாவுடனே நற்பதவி சேர, எங்களுக்கு நபி நாயகத்தின் பொருட்டால் அல்லாஹ் அருட்புரிவானாக.

## சமாதி தரிசனம் ஸ்திரீகளுக்குக் கூடாது.

சமாதிகளைப் போய்க்கண்டு தெரிசிப்பது எங்கள் மார்க்கச் சட்டப்படி பொதுவாக ஆண்பிள்ளைகளுக்கு ஸுன்னத்து என்னும் பொது விதியே, பெண் பிள்ளைகளுக்கு ஹறாம் என்னும் வேதாகம சட்ட விலக்காம். ஆனால் எங்கள் நபிகள் நாயகம் அவர்களின் கபுறு சரீபைத் தெரிசிப்பது மாத்திரம் ஆண் பெண் இருபாலாருக்கும் ஸுன்னத்தென்னும் பொது விதியே; பெண்கள் தன்னூரைவிட்டு நீங்கி தூரமாகிய ஊர்களிலிருக்கும் அவுலியாக்களின் கபுறடிக்கு வாகனங்களிலாவது வழிநடந்தாவது போகிறதும், நேர்ந்தகடன் கொடுக்க சில பதார்த்தங்கள் காணிக்கைகள் கொண்டுபோகிறதும், அந்த அவுலியாக்கள் இவ்வுலகில் சீவனோடிருக்கையில் எவ்வளவு அதபு மரியாதையாயிருந்தோமோ அப்படியின்றி ஒழுக்கமற்றிருக்கிறதும், திருவிழாவென்னுஞ் சந்தோஷ காலங்களில் விளக்குகள் ஏற்றுவதும், கொட்டுகள் அடிப்பதும், ராகம் பாடுவதும், பெண்பிள்ளைகளும் முகவரை கீறாத வாலிபர்களும் கூட்டங்கூட்டமாக வித்தியாசமின்றிக் கூடுவதும், கொடிய ஹறாம் என்றும் கெட்ட பித்அத் தென்றும், நாயகமாகிய செய்குனா இப்னு ஹஜறில் மக்கீ றஹ்மதுல்லாஹி அவர்கள் தங்களா லியற்றப்பட்ட "பத்தாவீ" என்னுங் கிதாபில் கூறியிருக்கின்றார்கள்.

இதனால், "சமாதி ஸ்தலத் தெரிசனத்திற்கு இஸ்லாம் மித்திரிகளாகிய" பெண்கள் போவது ஹறாம் என்பது நன்றாய் விளங்குகின்றது.

[ மு. நே ன். ]